செ.வெ.எண்: 291/2016 நாள்: 23.05.2016

# குழந்தைகள் சேர்க்கை அறிவிப்பு

நாகர்கோவில் அரசு குழந்தைகள் காப்பகம், கன்னியாகுமரி மாவட்ட சமூகநல அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் 6.'.322.'.1 சபரி அணை சமீபம், பறக்கின்கால், ஒழுகினசேரி, நாகர்கோவில் என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது. நாகர்கோவில் அரசு குழந்தைகள் காப்பகத்தில் 2016-2017ம் வருடத்திற்கு குழந்தைகள் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இக்காப்பகத்தில் சேர்க்கும் குழந்தைகளுக்கு உணவு, உடை, மருத்துவ வசதி, படிக்கும் செலவு, 2 இணை சீருடைகள், காலணி, போர்வை ஆகியவை இலவசமாக வழங்கப்படும். இக்காப்பகத்தில் சுமார் 100 காலியிடங்கள் உள்ளன.

இக்காப்பகத்தில் கீழ்க்கண்ட பிரிவினரின் 5 வயது முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் சேர்க்கப்பட்டு இல்லத்திலேயே தங்க வைக்கப்பட்டு இலவசமாக மேற்கூறிய அனைத்து வசதிகளும் வழங்கப்படும். 1 முதல் 5ம் வகுப்பு முடிய உள்ள குழந்தைகளுக்கு காப்பக தொடக்கப் பள்ளியிலும், 6 முதல் 12ம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு அருகிலுள்ள மேல்நிலைப்பள்ளியிலும் இலவசமாக கல்வி வழங்கப்படும்.

1. தாய்/தந்தை இருவரும் இல்லாத குழந்தைகள்.
2. தாய் அல்லது தந்தை இல்லாததால் பராமரிக்க இயலாத குழந்தைகள்
3. ஆயுள் தண்டனை கைதிகளின் குழந்தைகள்
4. தொழுநோயால் பாதிக்கப்பட்டோரின் குழந்தைகள்
5. மனநிலை பாதிக்கப்பட்டோரின் குழந்தைகள்
6. இலங்கை அகதிகளின் குழந்தைகள்
7. கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் குழந்தைகள்
8. மாற்றுத்திறனாளிகளின் குழந்தைகள்
9. சிறைக்கைதிகளின் குழந்தைகள்

மேற்படி பிரிவைச் சாா்ந்த பெற்றொா்.'.பாதுகாவலா் ஆண்டு வருமானம் ரூ.24000/-க்கு மிகாமல் இருத்தல் வெண்டும். மேற்படி பிரிவைச் சாா்ந்த குழந்தைகளைச் சேர்க்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் நேரடியாக விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. மாவட்ட சமூகநல அலுவலா்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
பழைய தாலுகா அலுவலக வளாகம்,
கோட்டாா், நாகர்கோவில்.

2. அரசு குழந்தைகள் காப்பகம்,
6/322/1, சபரி அணை சமீபம்,
பறக்கின்கால், ஒழுகினசேரி, நாகர்கோவில்

மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.